**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் – திசம்பர் 2018**

**D021 இலக்கணம்–3 (பொருள்)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மாறன் அகப்பொருளின் ஆசிரியர் யார்?
2. நால்வகைக் கவிகள் யாவை?
3. தலைவன், தலைவி சந்திக்கும் குறியிடங்கள் யாவை?
4. வரைவு என்பதன் பொருள் யாது?
5. பாங்கி யாரிடம் அறத்தொடு நிற்பாள்?
6. கற்பியலில் கூறப்படும் பிரிவின் வகைகள் யாவை?
7. அகப்பாட்டினுள் வரும் பொருள்கள் யாவை?
8. அகத்திணைகள் எத்தனை பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகிறது?
9. கரந்தை அரவம் என்பதன் பொருள் யாது?
10. 'காஞ்சி' என்பதற்குத் தொல்காப்பியம் தரும் பொருள் யாது?
11. ஐயனாரிதனார் வகுத்த புறத்திணைகள் எத்தனை?
12. உழுபுல வஞ்சி என்றால் என்ன?
13. எருமை மறம் – பொருள் தருக.
14. அறிவன் – பொருள் தருக.
15. பாடாண் – பொருள் தருக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. எண்வகை மணங்கள் யாவை?
2. வரைவு கடாதலின் வகைகளைக் கூறுக.
3. கற்பின் இலக்கணத்தை விவரிக்க.
4. உள்ளுறை உவமம், இறைச்சி – விளக்குக.
5. வஞ்சித் திணையின் வகைகள் யாவை?
6. நடுகல் குறித்து எழுதுக.
7. யானை மறம், குதிரை மறம் – விளக்குக.
8. அவிப்பலி என்றால் என்ன?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாங்கியிற் கூட்டம் குறித்தும் அதன் வகைகள் குறித்தும் விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) அகத்திணைக்கு உரிய மூன்று பொருள்களையும் விளக்கிக் கட்டுரை வரைக.

2. (அ) வெட்சித் திணை குறித்தும், அதன் துறைகள் குறித்தும் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) கற்பிற்குரிய கிளவித் தொகைகளை நம்பியகப் பொருள் வழி விளக்கியுரைக்க.

3. (அ) நொச்சித் திணை குறித்தும் அதன் துறைகள் குறித்தும் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) வாகைத் திணை குறித்தும் அதன் துறைகள் குறித்தும் விரிவாக விளக்கியுரைக்க.

***